THE HINDU • MONDAY, FEBRUARY 29, 2016



## Graduation Day

"Education is the fulcrum of life, peace, progress and development. It provides seedlings for culture and civilization. It is a passport to freedom and liberty and a higher calling in life," A.P. Dash, Vice-Chancellor, Central University of Tamil Nadu, said in his Graduation Day address at National College. He elaborated on the education and skill development programmes implemented by the Union government in recent years. The Global Initiative of Academic Networks (GIAN), among others, assumes significance with its global sweep. Besides, a series of steps for accreditation and ranking systems aim at transforming the Indian educational scenario and to set it firmly on a relentless pursuit of excellence. Six hundred candidates were awarded degrees and 300 in absentia. K. Raghunathan, secretary of the college, K. Anbarasu, Principal, and R. Sundhararaman, Controller of Examinations, were present.




▲ தேசிய கல்லூரியில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு பட்டம் வழங்குகிறார் தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ.பி.தாஸ்.

# தேசிய கல்லூரியில் பட்டமளிப்பு விழா

■ திருச்சி

திருச்சி தேசிய கல்லூரியின் பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி செயலாளர் கே.ரகுநாதன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் கே.அன்பரசு வரவேற்றார்.

திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ.பி.தாஸ் மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசியபோது,

"கல்வி என்பது வாழ்க்கை, அமைதி, வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றின் ஆதாரம் எனக் கூறப்பட்டது. மேலும், கல்வியே நாகரிகம், பண்பாட்டின் விதைகளாகும். உண்மையான சுதந்திரத்துக்கும், விடுதலைக்கும் கல்வியே ஆதாரமாக விளங்குகிறது" என்றார்.

விழாவில் 600 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவில், கல்லூரித் தேர்வு நெறியாளர் சுந்தரராமன், கல்லூரி அறிவியல் புல முதன்மையர் வி.நந்தகோபால், கலைப் புல முதன்மையர் பி.சந்திரசேகர், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.